

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு தீர்மானத்தின்படி இல்லந்தோறும் திமுக உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியினை முதல் முறையாக ஈரோடு தெற்கு மாவட்ட கழகம் பெரியார் நகர் பகுதி கழக செயலாளர் அக்னி டி.சந்திரசேகரன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துச்சாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லப்பொன்னி, ப.க.பழனிசாமி, டி.எஸ்.குமாரசாமி, ப.மணிராசு, என்.டி.பத்மநாபன், மு.சுப்ரமணியம், வி.செல்வராஜ், வில்லரசம்பட்டி எ.முருகேசன், மேயர் சு.நாகரத்தினம், ஜி.சண்முகம், கே.சந்திரசேகரன், சி.மணி, பாத்திமா, கனிமொழி நடராஜன், ஜெ.திருவாசகம், ஸ்ரீதர், சசிகுமார், விஜயலட்சுமி, புனிதா சுரேஷ், பிரவீனா, எட்வின், மீன் கணேசன், வீராச்சாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோடு கிழக்கு மற்றும் மேற்கு நகர திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை ஒட்டி, நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கலந்து கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொது மருத்துவ முகாமை துவக்கி வைத்தார். திருச்செங்கோடு மேற்கு நகர கழக செயலாளர் ஆர்.நடேசன், கிழக்கு நகர செயலாளரும், நகர் மன்ற துணைத் தலைவருமான தா.கார்த்திகேயன், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் வட்டூர் தங்கவேல், தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் தாமரைச்செல்வன், கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. ஆட்சியின் போதுதான் தமிழ்நாடு முழுமையான வளர்ச்சியை கண்டு வருகிறது

# நாமக்கல்லில் தி.மு.க. மூத்த நிர்வாகிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வில் திருச்சி சிவா பெருமிதம்!

## கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி., அமைச்சர் மா.மதிவேந்தன், பெ.இராமலிங்கம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாமக்கல், ஜூன் 5 -

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கட்சியின் மூத்த நிர்வாகிகள் 120 பேருக்கு பொற்கிழி உள்ளிட்ட நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் அரங்கில் மாவட்ட செயலாளரும், மாநிலங்களை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநிலத் துணைத் தலைவரும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கழக துணைப் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற குழு தலைவருமான திருச்சி சிவா எம்.பி கலந்து கொண்டு.கட்சியின் மூத்த நிர்வாகிகள் 120 பேருக்கு பொற்கிழி உள்ளிட்ட நல உதவிகளை வழங்கி, சிறப்புரையாற்றினார்.

அப்போது பேசிய திருச்சி சிவா, கட்சியின் பொறுப்பில் உள்ளவர்கள் உங்களில் ஒருவன் என்று கலைஞர் வழியில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கலைஞர் கனவு இல்லம் 7 ஆயிரம் வீடுகள் நாமக்கல் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது. முழுமையாக இந்த மாவட்டம் செயல்பட்டு வருகிறது. ஓலை குடிசையில் வசித்தவர்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்பு வீடு வழங்கியவர் கலைஞர். அதுபோல் இப்போது கலைஞர் கனவு இல்லம் திட்டம் ஏழை எளிய மக்களுக்கு பயன்படுகிறது.

**மற்ற மாநிலங்களுக்கு தி.மு.க. முன் மாதிரி!**

அறிஞர் அண்ணா கூறியது போல மக்களிடம் சென்று மக்களோடு வாழ வேண்டும். அவருக்குப் பிறகு கலைஞர் இந்த இயக்கத்தை வழி நடத்தினார். மற்ற மாநிலங்களுக்கு தி.மு.க. முன்மாதிரியாக திகழ்வதற்கு தி.மு.க.தான் காரணம். பெரியாரின் கொள்கை, கோட்பாடுகளை அண்ணா தி.மு.க. கட்சி வழியாக வழிநடத்தி மக்கள் ஆதரவை பெற்றார். எல்லோரும் பயன்பெறும் வகையில் கட்சி மற்றும் ஆட்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார்.

மகளிர் உரிமைத் தொகை, பேருந்துகளிலும் பெண்கள், புதுமைப்பெண் பெண், உள்பட பல்வேறு திட்டங்களில் ஒவ்வொரு குடும்பத்திலும் பயன்பெற்று வருகிறார்கள். பொதுவாழ்க்கைக்கு வருபவர்கள் திமுகவிற்கு வர வேண்டும். புதுடில்லியில் தமிழ்நாட்டில் இருந்து செல்லும் தி.மு.க. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனி மரியாதை உள்ளது. இன்றைக்கும் கலைஞர் நிலைத்து நிற்கிறார். திமுக தோன்றியதற்கு பிறகு தமிழ் வளர்ச்சி பெற்றது. இன்னும் எத்தனை மொழி, இனம் சார்ந்த தாக்கங்கள் வந்தாலும், திமுக தமிழ்நாட்டில் நிலைத்து நிற்கும்.

திமுகவில் உழைத்த மூத்த நிர்வாகிகளுக்கு நாங்கள் காட்டும் அன்பே, பொருட்களும் நல உதவிகளும் தான். உங்களைப் போலவே நாங்களும் இந்த கட்சியை தொடர்ந்து உறுதியோடு வழிநடத்துவோம் என்றும் திருச்சி சிவா பேசினார்.

**மூத்த நிர்வாகிகளை கௌரவப் படுத்திய மாவட்டம்!**

அமைச்சர் மா. மதிவேந்தன் பேசும்போது... எப்போதும் கட்சிப் பணிகளை மூத்த நிர்வாகிகள் வழிநடத்தி உள்ளனர். வேறு எந்த கட்சியிலும் இல்லாத வகையில் இது போன்று மூத்த நிர்வாகிகளை தி.மு.க. கவுரவப்படுத்தி வருகிறது. நாங்கள் இன்று கட்சி பொறுப்புகளில் இருப்பதற்கு மூத்த நிர்வாகிகளே காரணம். திருச்சி சிவா போன்ற மூத்த நிர்வாகிகள், இளைஞர்களை அடுத்த முன்னேற்ற கட்டத்திற்கு கொண்டு செல்லும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். மூத்த முன்னோடிகளின் தியாகத்தை போற்றி தொடர்ந்து இளைஞர்கள் இக்கட்சியை வழிநடத்துவார்கள். தி.மு.க.வை பொறுத்தவரை, நாமக்கல் மாவட்டம்தான் அதிக அளவிலான மூத்த நிர்வாகிகளை பொற்கிழி மற்றும் உதவிகள் வழங்கி கௌரவப்படுத்திய மாவட்டமாக உள்ளது என்றார்.

**தி.மு.க.வின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேருங்கள்!**

கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. பேசும்போது, மூத்த நிர்வாகிகள் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உழைத்த காரணத்தினால் தான் இன்று கட்சி உறுதியுடன் உள்ளது. இந்த கட்சி மாபெரும் ஜனநாயக இயக்கமாக உள்ளது. மூத்த நிர்வாகிகளை பார்த்து தான் இன்றைய கட்சியினர் கற்றுக் கொள்ள வேண்டும். குறை சொல்பவர்களை ஒதுக்கி விட்டு, நமது திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேருங்கள். தி.மு.க. ஆட்சியில், மகளிர் உரிமைத்தொகை பேருந்து பயணம், விவசாய கடன் தள்ளுபடி என பல நலத் திட்டங்களை செய்துள்ளோம். கடந்த 10 ஆண்டுகளில் அதிமுக செய்யாத சாதனைகளை 190 கோடியில் சுற்று சாலை, மோகனூர் தனி குடிநீர் திட்டம், தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, 854 கோடியில் கூட்டு குடிநீர் திட்டம், போதமலையில் 142 கோடியில் சாலை வசதி திட்டம், விவசாயிகளுக்கு மும்முனை மின்சார திட்டம், 7 ஆயிரம் பேருக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது. வரும் 2026ல் திமுக ஆட்சி அமைக்க அதன் திட்டங்களை காரணம் என்றார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் சி.மணிமாறன், நாமக்கல் மாநகராட்சி துணை மேயர் செ.பூபதி நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், அ.சிவக்குமார், ஒன்றிய செயலாளர் வி.கே .பழனிவேல் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள்,

கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை (செம்மொழி நாள்) முன்னிட்டு தஞ்சை மத்திய மாவட்டம், திருவையாறு சட்டமன்ற தொகுதி, கருப்பூரில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து, விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் தஞ்சை மத்திய மாவட்ட திமுக சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் வழங்கப்பட்டது. உடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வம், தஞ்சை மாநகர மேயர்சண்.இராமநாதன், துணை மேயர் மருத்துவர் மரு.அஞ்சுகம் பூபதி, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர், செயலாளர்கள், கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவாரூர் ஒன்றியம் புலிவலத்தில் மக்கள் கார்த்தி ஏற்பாட்டில் நடைபெற்ற 1000 பேருக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வினை ஒன்றிய செயலாளர் புலிவலம் ஏ.தேவா தொடங்கி வைத்தார். மக்கள் கார்த்தி, தம்பி.செந்தில், தேவா ஹரிகரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.



அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா மாவட்ட ஆட்சியர் அலவலக வாளாகம் மற்றும் மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ வெண்கலச் சிலைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கழக தோழர்களுக்கு இனிப்புகள் வழங்கி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் மாவட்ட துணை செயலாளர்கள் சி.சந்திரசேகரன், லதாபாலு, நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர்கள் இரா.கென்னடி, பூ.செல்வராஜ், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, வி.எழில்மாறன்,இரா.அண்ணாதுரை, இளையராஜா,பொன்.செல்வம், கே.ஜி. அருண் பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர், செம்மொழி நாயகர், கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா கோவை வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கோவைக்கு குடிநீர் வழங்கும் சிறுவாணி திட்டம் தந்த தலைவர் கலைஞர் அவர்களின் புகழை போற்றும் வகையில் சாடிவயல் சிறுவாணி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பஞ்சபள்ளியில் பாலக்கோடு மேற்கு ஒன்றிய செயலாளர் பி கே அன்பழகன் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளையொட்டி கழக கொடி ஏற்றி, அவரது திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி ஏழை எளியோர்க்கு இனிப்பு,மற்றும் உணவு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் சிவகுமார், மரக்கடை சக்திவேல், பாண்டுரங்கன், சாதன், முகுந்தன், கார்த்தி,தமிழ்வாணன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

**34 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம் : 25.7.1931



மறைவு : 5.6.1991

**எஸ்.மோகன்தாஸ்**

**முரசொலி மாறன் குடும்பத்தினர்**

எம்.அசோகன் – அ.சுமதி
சி.கண்மணி – கே.கவிதா

**மற்றும் பேரக்குழந்தைகள்**

**திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்**

**கே. இராமச்சந்திரன்**
**ஜூன் 5 (2021)**



தனது இளமைக் காலத்திலேயே கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்றியவர்.

மன்னார்குடி நகரச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1989ல் மன்னார்குடி தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மாவட்ட அறங்காவலர் நியமனக்குழு துணைத் தலைவர் பொறுப்பு வகித்தவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**